

# மாணிக்க தீபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்திரு

கனகையா மாணிக்கம் அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# மாணிக்க தீபம்

04.10.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு
உயர்திரு. க. மாணிக்கம்
**மாணிக்க தீபம்**

பதிப்பு
**2012 ஒக்டோபர் 04**

வெளியீடு
**குடும்பத்தினர்**

**அச்சு, வடிவமைப்பு**
நோபிள் பிறிண்டேர்ஸ்
817, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுடன்...



அமரர்

# திருமதி. கனகையா மாணிக்கம்

**தோற்றம்: 23.03.1925 மறைவு: 04.09.2012**

## திதி வெண்பா

நந்தவன வருடமதின் நல்லாவணித் திங்கள் தனில்
வந்த அபரபக்கச் சதுர்த்தித் திதியில் - மாதேவியார்
மந்தமற்ற மாசறு மாணிக்கத் தெய்வத்தாய்
பந்தங்களறுத்துப் பரமனடிசேர்ந்தாள் காண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருமுறைப் பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கினும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என் நாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதி கைக்கெடில
வீரட்டானதுறை அம்மானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

மயானேமறி கடல் விடம் உண்ட
வான வாமணி கண்டத்தெம் அமுதே
நாயி னேன்உனை நினையவும் மாட்டேன்
நமச்சி வாயஎன் றுன்னடி பணியாய்
பேயன் ஆகிலும் பெறுநெறி காட்டாய்
பிறைகு லாஞ்சடைப் பிஞ்ஞகனேயோ
சேயன் ஆகிநின் றலறுறவே தழகோ
திருப் பெருந்துறை மேவிய சிவனே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலா கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரவென் கண்கள் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம்பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய்மண்ட பத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடைமடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்த
பின்னைப்பிறவியறுக்க நெறிதந்த
பித்தற்குப்பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்

## திருப்புகழ்

இருவினையின் மதி மயங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்குற் றலையாதே
பரமகுரு அருள் நினைந்திட் டுணர்வாவே
பரவு தரிசனையை என்றற் கருள்வாய
தெரிதமிழை உதவு சங்கப் புலவோனே
சிவனருளும் முருக செம்பபொற் கழலோனே
கருணைநெறி புரியும் அன்பர்க் கெளியோனே
கனகசபை மருவுகந்தப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கள் அம்மா

அடங்காப்பற்று என்ற வன்னிப்பிரதேசத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கரிகட்டுமூலை தெற்குப்பகுதியில் மிகப் பழமைவாய்ந்ததும் கிராமியப் பண்போடு தொடர்ந்து வாழும் மக்கள் உள்ளதும் செந்நெல் விளைபூமியும், தெங்கும், கற்பகத்தருக்களும், கிழக்கே கற்பக விநாயகனும், மேற்கே கொட்டுக்கிணற்றுப் பிள்ளையாரும் கர்ணபரம்பரைக் கதைகளோடு உறைந்து அருள்பாலிக்கின்ற கிராமந்தான் குமுழமுனை.

இக்கிராமத்தில் பழங்குடி மக்களான வாரியார், சங்கரியார் பரம்பரையில் உதித்த தெய்வானைக்கும் குமாரவேலு நாகமணிக்கும் பிள்ளையாகப் பிறந்தவரே எமது அம்மா மாணிக்கம் அவர்கள். இவரின் உடன் பிறப்புக்கள் திரு பொன்னையா, செல்லப்பா (அமரர்) சிதம்பரப்பிள்ளை, கனகம்மா (அமரர்) இலட்சுமி, வேலுப்பிள்ளை (அமரர்) சிவக்கொழுந்து ஆகியோர் ஆவார். பெற்றோரும் உடன்பிறப்புக்களும் ஊர்மக்களும் மிகவும் பண்போடும் அன்போடும் வாழ்ந்தவர்கள்.

அம்மா தனது பதினான்கு வயதில் முல்லைத்தீவு சிலாவத்தை என்ற கிராமத்தைச் சேர்ந்த கதிர்காமு விதானையார் பரம்பரையைச் சேர்ந்த சின்னப்பு கனகையா என்பவரை மணம்செய்தார். எங்கள் தகப்பனாரை நாங்கள் ஐயா என்றுதான் எமது கிராம வழக்குப்படி கூறுவோம். ஐயா முல்லைத்தீவு பொன்னையா முதலியார், தம்பையா முதலியார், கனகையா முதலியார், பிரபல சட்டத்தரணி T.M.சபாரத்தினம் ஆகியோருடன் நெருங்கிப்பழகுகின்றவர்.

ஐயாவும் அம்மாவும் தமது இளம் குடும்ப வாழ்க்கையினைக் குமுழமுனையிலே T.M சபாரத்தினம் அவர்களின் உறவினரான சரவணமுத்துப்புலவர் வாழ்ந்த சரவணையார் வளவு என்ற பெயருடைய காணியை விலைக்கு வாங்கிக் குடியிருந்து தமது முயற்சியினால் T.M சபாரத்தினம் அவர்களுக்குச் சொந்தமான கதிரவேலன் தரை என்ற மிகப்பெறுமதி வாய்ந்த அறுதி உறுதிக் காணியையும் அவரிடமிருந்து எருமைகளையும் வாங்கித் தமது வாழ்வை ஆரம்பித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் பதினான்கு பேரைப் பெற்று மிகுந்த கடினத்தின் மத்தியில் வளர்த்து கல்விகற்பித்த பெருமை எங்கள் அம்மா ஐயாவைச் சார்ந்தது. நெல்வயற் செய்கை, மாடுவளர்ப்பு என்ப வற்றுள் கிடைத்த வருமானத்தைக் கொண்டு எம்மை வளர்த்துக் கல்வி கற்பித்துச் செயற்படுத்தினார்.

மிகுந்த நெருக்கடியின் மத்தியிலேயே எங்களைப் பெற் றோர் வளர்த்தனர். மூத்தபிள்ளையைப் படிக்க வைத்தால் அதைப் பார்த்து மற்றப்பிள்ளைகள் படித்துவிடும் என்ற சபாரத்தினம் வழக் கறிஞரின் ஆலோசனைப்படி எமது மூத்த சகோதரனைச் சின்ன வகுப்பிலிருந்தே பெரிய பாடசாலைக்கு ஐயா அனுப்பினார். யாழ்ப் பாணத்தில் உள்ள கல்லூரிகளின் விடுதியிற் தங்கவைத்து அவரின் செலவுக்கு நெற்செய்கை, மாடுவளர்ப்பு என்பவற்றுள் கிடைத்த வருமானத்திலேயே அனுப்பிவைப்பார். இதற்கு எமது ஐயா, அம் மாவின் ஊக்குதலுடன் சிறுவயதுடைய எங்களையும் சேர்த்து உழைத்தனர். கிராமப் புறப்பாடசாலை என்பதும் எமக்கு அறு வடை, விதைப்பு எல்லாவற்றிற்கும் குறுகிய நாட்கள் விடுமுறையை அந்த அதிபர் தருவார். **“மோனை இண்டைக்கு மத்தியானம் வாத் தியாரிடம் கேட்டுக்கொண்டு வா வயலுக்குச் சாப்பாடு கொண்டு போகவேணும்”** என்ற அம்மாவின் கட்டளைப்படி சந்தோசத்துடன் கேட்டுக்கொண்டு போன ஞாபகம் இன்றும் எமக்கு இருக்கின்றது.

நாங்கள் ஐயாவுடன் வயல் செய்தும், மாடுவளர்த்தும் அண்ணனுக்குப் பணம் அனுப்பியது நன்கு நினைவிருக்கிறது. எங்கள் பெரியக்காவை அம்மாவுக்கு இரட்டைப் பிள்ளைகள் பிறந்தபோது படிப்பை நிறுத்தி வீட்டில் எங்களையும் இரட்டைப் பிள்ளைகளையும் அக்கா கவனமாகப் பார்த்ததும் தெரியும். மற்றச் சகோதரங்கள் எமது குடும்பத்திற்காக பட்ட துன்பங்கள் யாவற் றிற்கும் ஈடுகொடுக்கின்ற எங்கள் அம்மாவின் செயல்திறன்ஆச் சரியமானது. அம்மாவின் அன்புப் பெறாமகன் வர்ண சுப்பிரமணியம் அவர்கள் எமது வயல்செய்கைக்கும் சரி ஏனைய உதவிகளுக்கும் சரி ஆற்றிய சேவை அளப்பெரியது.

புதுக்கண்ட நெற்கணியிலும் 5ம் கட்டை தோட்டக்காணி யிலும் காடுவெட்டித் துப்பரவு செய்து நெல்விதைத்தும், கச்சான், உழுந்து விதைத்தும் எம்மை ஊக்குவித்து தானும் எங்களையும் இணைத்து வேலைசெய்கின்ற எங்கள் அம்மா எமக்குக்குத் தந்த புது அரிசிப் பொங்கல், எண்ணெய்ப்பிட்டு இன்றும் எங்கள் நினைவில் நிற்கின்றது.

வயலில் அறுவடை செய்யும் போது ஐயா மத்தியானம், **“தம்பி அம்மா சாப்பாடு கொண்டு வருவா. போய் மாறி வாங்கி வா”** என்று எங்களில் யாரை நியமிப்பார் என ஆவலுடன் எதிர்பார்ப் போம். தெரிவின்பின் எங்களில் ஒருவர் மகிழ்வோடு விரைந்தோடு வோம். அம்மா சுடசுடச் சோறும் கறிகளும் கடகத்தினுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமேல் சுமந்து கால்நடையில் வரும்போது அம்மாவிடம் சுமையை மாறிச் சுமந்துகொண்டு கவனம்மோனை சுடுசோறு தலையிற்சுடும் என்று ஒரு சேலைத்துண்டை எமது தலையில் வைத்துவிடுவா. அம்மாவுடன் மருதடிக் கிணறு, குறத்தி செத்த பாலை, உப்புப்போட்ட மோட்டை, தில்லம் வாய்க்கால், கடந்து சென்று பொன்னையா ஐயரின் புளியமரத்தின் கீழ் எல்லோரும் அமர அம்மா உணவு பரிமாறிய பின் மீதியிருந்தால் அம்மாவும் சாப்பிடுவார். சிலவேளை அம்மாவுக்குச் சோறு இல்லாமலும் போய்விடும்.

கம்பால் சாப்பாட்டுக்குப் புதுநெல் அடிக்கவும் சூடுவைக்க உப்பட்டிகூட்டவும் அம்மாவும் கூட நின்று தானும் செய்து எங்களை ஊக்குவித்த செயல்களை இன்றும் நினைக்கிறோம். படிப்புக்கும், தொழிலுக்குமாக இடையில் உள்ள எங்களை இயக்கிய எங்கள் அம்மா யாழ்ப்பாணத்திற்கு ரீயூசனுக்குச் செல்லும்போது விடியப்புறம் எழும்பி உணவுசமைத்து எங்களையும் எழுப்பி பஸ்வண்டியில் அனுப்புவா எங்கள் அம்மா. பல கஸ்டமான சூழலிலும் நாங்கள் ஒருவாறு படித்து எங்களின் உயர்வுக்கு பாடுபட்டவர் எங்கள் அம்மா.

எமது சின்னண்ணை, பாலண்ணை, பெரியக்கா, சகோதரிகள் தேவி இரட்டைப்பிள்ளைகள் எமது படிப்புக்கு உதவிய செயல் எமது அம்மாவின் ஊக்கத்துடனேயே செயலாகியது. எமது இளைய உறவுகள் மூவரை எதுவிதமான வசதியீனமும் இல்லாமல் கல்வி கற்கச் செய்ததும் அவர்கள் உயர்ந்த பதவிகளில் இருக்கச் செய்ததும் அம்மாவின் உயர்ந்த செயல்திறன் என்றே கூறலாம்.

தம்பிசிறிகாந்தன் எமது அம்மாவின் சேலைத்தொங்கல்களில் பிடித்துக்கொண்டு அவவுடன் அண்டிப்படுத்திருப்பதும் அவர் அம்மாவின்மேல் வைத்துள்ள அதிகமான பற்றும் எமக்கு நினைவிலிருக்கிறது. அவர் அம்மாவோடிணைந்து பல தொழில் முயற்சிகளைச் செய்துள்ளார். தம்பி ராசாவும் , யோகுவும், ரவியும், ரகுவும் அம்மா மேற்கொண்ட அதீத பாசம் எப்பொழுதும் மறக்க முடியாதது. கடைசிச் சகோதரி சுசீலா அம்மா மேற்கொண்ட அதீத பாசத்தை அவரின் அம்மாவின் பிரிவை ஏற்கமுடியாமல் தவிக்கின்ற தன்மை காட்டிநிற்கின்றது.

அம்மா ஒரு தாயின் வரைவிலக்கணத்திற்கு அவர் எங்களை உருவாக்கிய முறையிலிருந்து காண்கிறோம். அம்மா ஊரார், உறவினர்கள், அயலவர்கள், மூத்த உறுப்பினர்களுடன் அன்புடனும் அமைதியுடனும் பேசும் பண்பு, வறியவர்க்கு உதவும் செயல், நல்ல இறைபக்தி யாவும் உயர்ந்ததே. அவரின் வாழ்விற்குரிய பண்பாட்டு விழுமியங்கள் உயர்ந்தனவே.

ஊர்ப் பெரியவர்களை நாகலிங்கம் அண்ணன், பொன்னம்பலம் அண்ணன், தில்லையம்பலம் அண்ணன், அரியகுட்டி அண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணன், கந்தையாண்ணன், சின்னத்தம்பி அண்ணன், சிதம்பரப் பிள்ளை அண்ணன், பொன்னையா ஐயர், மயில்வாகனம் ஐயார், வேலுப்பிள்ளை அண்ணன் என்று எல்லோரையும் மரியாதையாகப் பேசுபவர்.

அம்மாவின் சினேகிதிகளின் பிள்ளைகள் சிலர் அம்மாவின் பால்குடித்து வளர்ந்ததையும் அம்மா சொல்லுவார். இப்படிப்பட்ட அம்மா பிற்காலத்தில் எந்தவித இடருமின்றி மிக வசதியோடு வாழ்ந்தவர். வெளிநாட்டில் இருக்கும் பிள்ளைகளும் நாங்களும் அம்மாவை மிகுந்த கவனத்துடன் பராமரித்துவந்தோம்.

அம்மாவின் சுகவீனத்தால் கொழும்பு கொண்டு சென்று மிகவும் கவனத்துடன் சிகிச்சை செய்து நல்ல ஆரோக்கியம் உள்ள வராக மாற்றிவீட்டில் நன்கு பராமரித்தோம். அம்மா தனது ஊரவர் உறவினர்களுடன் நன்கு பேசி மகிழ்ந்து கொண்டிருப்பார். எதிர் பாராமால் அம்மா எங்களைவிட்டு பிரிந்து பறந்துவிட்டார். அம்மாவின் பிரிவுத்துயர் அவர் பிரிந்ததில் இருந்து எம்மைத் தொடர்கிறது அம்மா, அம்மா, மீண்டும் வாரமாட்டீர்களா என இன்றும் எம் மனங்கள் அலைமோதுகின்றது. அம்மாவின் மறை வின் பின் என்றும் எமது பார்வையின் நினைவுச்சின்னங்களாக அவ ரின் ஊன்றுகோலும் சாய்மனைக் கதிரையும் பாக்குஉரலும் அம் மாவை நினைவூட்டுகின்றன.

**பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிகரத்தின் உச்சியைத் தொட்ட எங்கள் குல தெய்வம்

சிறந்த தாய்மைக்கு இலக்கணம் வகுத்தவர் எங்கள் அன்னை. அனைவரும் போற்றும் குடும்பத் தலைவியாகவும், தான் கொண்ட இலட்சியத்தில் பிடிவாதம் கொண்டவராகவும், பெரியதோர் குடும் பத்தினை நெறிப்படுத்திய சிறந்த ஆளுமை கொண்ட வராகவும் உறவுகளின் பாலமாகவும் அன்பு பாசத்தின் பிறப்பிடமாகவும் சிறந்த சமயோசிதபுத்தி கொண்ட வராகவும், சமயம், பண்பாடு விருந்தோம்பல் ஆகிய வற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராகவும் திகழ்ந்த குல தெய்வம் இன்று எங்கள் மத்தியில் இல்லை என் பது எம்மைத் துயரத்தின் உச்சிக்கே கொண்டு போய்விட்டது. தனது வாழ்க்கையில் முழுஅறிவை யும், பல வெற்றிகளையும் கண்ட எங்கள் அன்னைய ஓர் வீரத்தாய் என சிலர் கூறியுள்ளனர். யதார்த்த நோக்கில் அன்னாரை பல வெற்றிகளைக் கண்ட ஓர் வீரத்தாயகவே பார்க்கின்றேன்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

(குறள் - 236)

சமூகத்தில் ஒருவர் தோன்றும்போதே மக் களால் போற்றத்தக்க வகையில் விளங்கவேண்டும் என்பதே இக்குறள் கூறும் உண்மை. அவ்வாறில்லை யாயின் அவர் சமூகத்தில் தலை நிமிர்ந்து நிற்கத் தகுதி அற்றவர் ஆவர். "பிறப்பு உண்டேல் இறப்பு உண்டு" எனப் பாடியுள்ள சுந்தரமூர்த்தி நாயனார். இத்தகைய வாழ்க்கைத் தத்துவங்களினூடே பார்க்கும்போது தான் வாழ்ந்த காலப்பகுதியில் அனைத்துச் செல் வங்களையும் பெற்றுப் புகழின் உச்சகட்டத்தைத் தொட்டவர் எங்கள் அன்னை. தனது வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினால் சில இழப்புக்கள் துன்பங்களைக் கண்டிருந்தும் இவற்றால் அவர் என்றும் துவண்டது கிடையாது. எங்கள் உயர்ச்சியின் ஒவ்வொருகட்டத்திலும் மிகுந்த நாட்டம் செலுத்தியதுடன் அதில் அவர் கண்ட வெற்றிக் களிப்புக்கள் பலபல.

**எமது உயர்வின் ஏணிப்படி**

எங்கள் குடும்பத்தில் ஆண்பிள்ளைகளில் இளைய வனாகிய என்னிடம் என் அன்னை கொண்டிருந்த அன்பு, பாசப் பிணைப்பு எந்த வார்த்தைகளாலும் வர்ணிக்க முடியாதவை. இதனை அவர் எனக்கு வரைந்த இந்த மடலில் காணலாம்.



எனது கல்வி உயர்விலும் மணவாழ்க்கைத் தெரிவிலும் அதிக அக்கறை காட்டியிருந்த எங்கள் அம்மா. என்வாழ்க்கை யின் இவ்இரு முக்கியமான கட்டங்களிலும் உன்னத வெற்றித் தடம் பதித்த பெருமையத் தனதாக்கிக்கொண்டவரும் எங்கள் உயர்வுக்காக சிலவேளைகளில் அவர் கண்டிப்பாக நடந்து கொண்டதனை நாம் என்றும் மறக்கமுடியாது. எங்கள் அன்புத் தந்தையார் எங்களுக்குக் காட்டிய கல்விப்பாதையை தொடர் ந்தும் நெறிப்படுத்திய பெருமை எங்கள் அன்னையையே சாரும்.

எமது கிராமத்திற்குக் கல்வியின் சிறப்பினை எடுத்துக் காட்டிய முன்னோடி எங்கள் தந்தை. அவரது முயற்சிக்கும் உயர் விற்கும் மிகுந்த ஒத்துழைப்பினைக் காட்டியதுடன் எங்கள் உயர்வுக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர் எங்கள் அன்னை. நான் சிறுவனாக இருந்த காலம் தொட்டே எனது கல்வியில் மிகுந்த அக்கறை கொண்டிருந்ததுடன் அதற்காகப் பல உதாரணங்களையும் புத்திமதிகளையும் வழங்கியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனது கடந்தகால அனுபவங்களை மிகுந்த சுவாரசியமாக எடுத்துக்கூறி எங்களை மகிழ்விப்பதுடன் எம் உயர்வில் பெருமையும் கண்டிருந்தார். குறிப்பாக எனது இளமைக் காலத்திலேயே கல்வியில் (B.A(Hon) M.Phil. phD) பெறவேண்டிய பட்டங்கள் யாவற்றையும் பெற்றிருந்தது அவரை மிகுந்த மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருந்தது. 1989 ஆம் ஆண்டு யாழ்பல்கலைக்கழகத்தில் எனது இளங்கலைமாணிப் (B.A Hons) பட்டமளிப்பு விழா நடைபெற்றபோது மிகுந்த போக்குவரத்து தடைகளின் மத்தியிலும் கலந்துகொண்டதுடன் அதில் அவர் கண்ட மகிழ்ச்சியை இன்றும் என் மனக் கண்ணில் நிறுத்தியிருக்கின்றேன். மேலும் 2004 இல் எனது கலாநிதிப்பட்டப்படிப்பினை முடித்து புதுடில்லியில் இருந்து நாடு திரும்பியவுடன் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து எங்கள் குடும்பத்துடன் ஒரு மாதத்திற்கு மேலாக தங்கியிருந்தது என்றும் எங்கள் நினைவிலிருந்து நீங்கமுடியாதவை.

சொந்த பந்தங்களை அரவணைப்பதிலும் அவற்றிற்கு உயிரோட்டம் கொடுப்பதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர் எங்கள் அன்னை. சில சந்தர்ப்பங்களில் அவரது எண்ணங்கள் கைகூடாது போய்விட்டாலும் இறுதிவரை தான் கொண்ட இலட்சியத்தில் பிடிவாதமாக இருந்தார். இதில் அவர் ஈட்டிய வெற்றிகளில் ஒன்றாகவே எனது மணவாழ்க்கைத் தெரிவினை நான் பார்க்கின்றேன். தனது நெருங்கிய உறவினரான (சரவண அத்தானின் பேத்தியை) திருமண பந்தத்தை ஏற்படுத்தியது. அவருக்கு அளவற்ற ஆத்மதிருப்தியை கொடுத்தது. எங்கள் திரு மணநாளில் இருந்து தான் மறையும் காலம்வரை அடிக்கடி தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதுடன் பிள்ளைளது கல்வி முன்னேற்றம், உடல்நலம் பற்றி, அடிக்கடி விசாரிப்பது வழமையாகி இருந்தது. அம்மா எமக்கு வரையும் மடல்கள் எங்கள் எல்லாச் சகோதரர்களைப் பற்றியும் ஏனைய உறவுகள் பற்றியதுமான உடனடித் தகவல்களையே கொண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்துடன் தான் பெற்ற பிள்ளைகள் யாவரும் தன்னுடன் இருக்க வேண்டும் என்னும் ஏக்கத்தினையும் தொட்டு நிற்கும்.

**அம்மாவுடன் இறுதிக்காலம்**

நான் கனடாவுக்குப் புலம் பெயர்ந்தது அம்மாவுக்கு அவ்வளவு திருப்தி இல்லை. ஆனாலும் தனது பேரப்பிள்ளைகளது கல்வி உயர்வில் இறுதிவரை மிகுந்த அக்கறை காட்டியிருந்தார். இதற்காக அவர் கூறிய வார்த்தைகள் "நீங்கள் நீண்டதூரத்திற்குப் போய்வீட்டீர்கள் இனிமேல் எனக்காகத் திரும்ப இங்கு வருவது புத்திசாலித்தனமல்ல. ஆனால் பிள்ளைகளது படிப்பு, முன்னேற்றம், பாதுகாப்பு, ஆகியவற்றில் கவனமாக இருங்கள்" இவ்வார்த்தைகள் என் இதயத்தைத் தொட்டு விட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு ஆண்டுகள் கழித்து அம்மாவைத் தரிசித்தேன். அம்மாவுடனிருந்த அந்தச் சிலநாட்கள் என்றும் மறக்க முடியாதவை. தன்னை ஆகுதியாக்கி எம்மை வளர்த்த அந்த அன்புத் தெய்வத்துடன் நான் பேசிய வார்த்தைகளிலும் மகிழ்ச்சி அடைந்ததுடன் என் ஒவ்வொரு அசைவிலும் கண்ணும் கருத்துமாக இருந்தார். அவரது உடல் இயக்கம் தளர்ந்து இருந்த போதும் மனம் எந்த அளவிலும் தளரவில்லை. அந்த நாட்களில் நான் எது செய்யவேண்டும் யார் யாரை எல்லாம் பார்க்க வேண்டும் என அடிக்கடி கூறியிருந்தாரோ. அவரது சொற்படியே நானும் நடந்துகொண்டேன். மேலும் தான் தனது சொந்தவேலைகளைத் தானே செய்யவேண்டும் மற்றவர்களுக்கு சுமையாக இருக்கக்கூடாது என்பதிலும் அவர் தெளிவாகவே இருந்தார். இதற்காக அவர்கூறியது.

"நீங்கள் எல்லோரும் வெவ்வேறு இடங்களில் இருக்கின்றீர்கள் தம்பி நீ என்னைப் பார்க்க எவ்வளவு தூரத்தில் இருந்து வந்திருக்கின்றாய் நானோ வாழ்ந்தகாலம் போதும் எனக்கு உடல் தளர்ந்துவிட்டது இனிமேல் மற்றவர்களுக்குச் சுமையாக இருக்க விரும்பவில்லை.

அம்மாவின் வார்த்தைகள் அடிக்கடி என் மனதில் எதிரொலித்த வண்ணமே இருந்தது. இதனால் வீட்டில் இருந்து புறப்பட்ட நான் எனது பயணத்தை இடையில் நிறுத்தி மீண்டும் ஒரு தடவை எம் அம்மாவின் இறுதித் தரிசனத்தைப் பெற்றுக் கொண்டேன். பின்பு 02.09.2012 கனடா நாட்டை அடைந்ததும் அம்மாவின் குரல் என் தொலைபேசியில் ஒலித்தது.

"தம்பி" சுகமாக உனது பிள்ளைகளிடம் சேர்ந்துவிட்டியா மருமகளும் பிள்ளைகளும் சுகமாக இருக்கிறார்களா. அதுவே எனக்குப் போதும் அவர்களை விட்டுவிட்டு இனிமேல் எங்கும்போக வேண்டாம்"

இதுதான் அந்த அன்புத்தெய்வம் இறுதியாக எனக்கு விட்டுச் சென்ற வார்த்தை. இவ்வார்த்தையை கேட்டு 8 மணித் தியாலங்களின்பின் அதே தொலைபேசியில் கேட்டதோ வெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவலச் செய்தி நாங்கள் நால்வரும் ஆடிப்போய்விட்டோம். எங்கள் மீது இறுதிவரை அளவற்ற பற்றுப்பாசம் கொண்டிருந்த அந்த வேளை எம் எல்லோரையும் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு தான் கூறியவாறு ஏனையோருக்குச் சுமையாக இருக்காது சுமைதாங்கியாகவே இருந்து விட்டு எம்மைவிட்டு இறைவனடி சேர்ந்து விட்டது அவரது பிரிவால் ஏற்பட்ட வெற்றிடத்தை யாருமே நிரப்பமுடியாது. எத்தனையோ துன்ப துயரங்களை எல்லாம் சுமந்து பல வெற்றிப் பிடிகளைத் தொட்ட தெய்வம் இன்று எங்கள் மத்தியில் இல்லை என்ற செய்தியை என்னால் நம்பவோ சகிக்கவோ முடியவில்லை. அவரது உயிர் எங்கள் எல்லோரிலும் ஓடிக்கொண்டே இருக்கின்றது. அவரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித் திருப்பதுடன் அன்னாரது எண்ணங்கள் சில நிறைவேற அவர் எங்கள் முன் விட்டுச் சென்ற பணிகளைத் தொடருவேமாக.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**கனிஷ்ட புதல்வன்**
**கலாநிதி கனகையா - இரகுநாதன்**
**(கனடா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழியா ஆழ்மனப்பதிவு

ஆயிரம் கோடி உறவுகள் வந்தாலும்
அம்மாவுக்கிணையாகுமா!
ஆயிரம் கோடி தெய்வங்கள் வந்தாலும்
அம்மாவுக்கீடாகுமா!
ஆயிரம்-

அன்பினை வார்த்து அறிவினை ஊட்டி
பாசத்தால் வளர்த்தவளே! - நற்
பண்பினை பழக்கி குவலயம்தன்னில்
நிமிர்ந்திடச் செய்தவளே!
பாலூட்டும்போது தாலாட்டுப்பாடி
இசைவளம் தந்தவளே- நற்
சூழலை அமைத்து தீயவை அண்டாமல்
போர்த்தியே வளர்த்தவளே!
ஆயிரம்-

பதினான்கு மகவை பெற்றமகராசி
பதினாறும் பெற்றவளே!- தன்
மதிபோன்ற முகத்தில் மலர்ந்திடும் சிரிப்பால்
உலகையே ஆண்டவளே!
சுமை தாங்கியாகி குடும்பத்தின் சுமையை
மகிழ்வோடு சுமந்தவளே! எங்கும்
பகையேதும் இல்லா பெருவாழ்வு வாழ்ந்து
அன்பிலே ஒளிர்ந்தவளே!
ஆயிரம்-

துன்பத்தின் மூலத்தை உணர்த்தியே வளர்த்து
நெஞ்சுரம் தந்தவளே! மன
இன்மும் துன்பமும் சமனாகப்பார்த்திடும்
பக்குவம் தந்தவளே!
மானத்தின் உயர்வில் கவரியின் பண்பை
எம்முள்ளே விதைத்தவளே! நம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிப்பசிக்கு அறுசுவை உணவாக்கி
மகிழ்வோடு பகிர்ந்தவளே!
தனக்கேதும் இல்லாமல் நமக்காகப் பரிமாறி
நீரருந்தி துயின்றவளே! தன்
மனமெங்கும் நாமமாகி நமக்கான வாழ்வாகி
தியானத்தில் நிலைத்தவளே!

ஆயிரம்-

நுளம்பேதும் குத்தாமல் வேப்பிலைப் புகைபோட்டு
எம்மையே காத்தவளே! நம்
உளம் நொந்த போதெல்லாம் நற்கதை கூறியே
உற்சாகம் தந்தவளே!
துயில்கின்ற போதெல்லாம் தன்சேலை வசத்தால்
சாமரம் வீசியவளே! நம்
வயல்மீது வீசிடும் பூந்தென்றல் காற்றாகி
தாய்ப்பாசம் தந்தவளே!

ஆயிரம்-

தமிழரின் பண்பிலே சிறிதேனும் பிறளாமல்
பண்போடு வாழ்ந்தவளே! நம்
தமிழரின் கலைதனில் வேரான கதையாவும்
பாடியே இசைத்தவளே!
அப்பாவின் வாழையிலை எச்சத்தில் சோறேற்றி
காதலாய் சுவைத்தவளே! நாம்
தப்பேதும் இல்லாமல் குடும்பத்தில் வளர்ந்திட
பண்பாக மிழிர்ந்தவளே!

ஆயிரம்-

மும்மாரி பொழிந்த வன்னிவள நிலமெல்லாம்
தரிசான வேளையிலே நம்
மாரித்தாயே நின் பிரிவு கண்டு
அடைமாரி பொழிந்ததுவே!
இயற்கையின் கண்களெல்லாம் நீரூற்றாய் பெருகிடவே
இயற்கையோடு கலந்தாயே! மனம்
இயலாமல் கதறுகிறோம் துடிக்கின்றோம் தாயே!
நின்பாதம் தொழுதிடுவோம்

ஆயிரம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறவியின் மனம் யாவும் இறைநிலை கண்டிடும்
சுயநலம் வீற்றிருக்கும் - தாய்
துறவியாய் வாழ்ந்துமே எமக்காக வாழ்ந்திடும்
தவபலம் ஓங்கிநிற்கும்
அன்பிலே வானாகி பண்பிலே இறையாகி
நீக்கமற வாழ்பவளே! நம்
எண்ணத்தின் ஆழத்தில் உயிரதின் மூச்சாகி
என்றுமே வாழ்ந்திடுவாய்.

"தாய்மனம் குளிர்ந்திட வாழ்ந்திடும் மாந்தர்
தரணியில் உயர்ந்திடுவார்"

**தூரதேசத்திலிருந்து...**
**உன் அருமை அன்பு மகன் ஸ்ரீகாந்தன்**
**மருமகள் ஜெனீவா**
**பேரப்பிள்ளைகள் பிரியந்தன், பிரியந்தினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்கள் அம்மாவினாலும், ஐயாவினாலும் கட்டிக்காக்கப்பட்ட எமது குடும்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணிக்கக்கல்லா இவர்...

மாணிக்கம் என்றதும் கதிர்காமம் கண்ணுக்குள் நிறைந்து நிற்கும். மாணிக்க கங்கையில் நீராடிய ஞாபகங்கள் எண்ணக்கோர்வையில் வந்துபோகும். மாணிக்கக் கற்களும் விளைவித்த மாணிக்க கங்கைபோல மாணிக்க அக்கா மாணிக்கமான புதல்வர்களையும் புதல்விகளையும் பெற்றெடுத்தவர்.

"பத்தும் பதினாறும் பெற்று வாழ்க" என மணநாளில் பலரும் வாழ்த்துவர். அந்த வாழ்த்துக்களை மனங்கொண்டு கனகையா - மாணிக்கம் தம்பதிகள் வாழ்ந்தனர். பல பிள்ளைகள் பெற்று குசேலராக வாழ்வோர் எண்ணிக்கை தான் வன்னி மண்ணில் கண் கண்ட உண்மை. ஆனால் கனகையா குடும்பம் பிள்ளைகளின் கல்வியில் அதிக அக்கறை கொண்டு உழைத்தனர். சிலா வத்தை கனகையா அண்ணை என்றதும் நெடிதுயர்த்த அவர் உருவம் சால்வைத்துண்டு தோளில் போட்டு மண் வெட்டியுடன் எண்ணக் கண்ணில் தோன்றும். 'விடா முயற்சி அவரின் குடும்ப வெற்றிக்கான இரகசியம். பரிந்து உரையாடும் பண்பும் பிள்ளைகளைக் காதல் கொள்ளும் அந்தத் தந்தையை இந்நேரத்தில் நினைவுகொள்ளாமல் இருக்க முடியாது. பசும் பாலால் பால் புகட்டி பல்கலை களையும் கற்கவைத்தும் புத்திரச் செல்வங்களை மாணிக் கக்காவும் கனகையா அண்ணையும் புகழ் மணக்க வைத்த பெருமையை என்னென்று வார்த்தைகளால் அளவிட முடியுமா?

குமுளமுனை என்ற கிராமத்தில் பஸ்கூடப் பயணம் செய்யத் தொடங்காத காலத்தில் மக்கள், நடையும் மாட்டுவண்டியுமாகத் தான் பயணத்தைச் செய்தனர். கனகையா மாணிக்கம் தம்பதியினர் அககாலத்திலே புத் திரனைப் பரமேஸ்வராக்கல்லூரி (இன்று யாழ்பல்கலைக் கழகம்) விடுதியில் இருத்திப் படிப்பித்தனர். இது குமுள முனையில் யாருமே அவர்கள் காலத்தில் செய்யவில்லை. என் மூத்த அண்ணனை கரணவாயில் ஒரு ஐயர் வீட்டில் விட்டுப் படிக்க வைத்ததாகக் கூறிக்கொள்வார் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை. குமுழமுனையிலிருந்து முதன்முதலில் பேரதானை குண்ட கசாலையில் மகனைப் படிக்கவைத்த பெருமையும் இவர்களையே சாரும். இதனை தொடர்ந்து ஏனைய சகோதரர்களும் மேற்படிப் பைச் செய்யத் தூண்டப்பட்டனர்.

ஆனந்தராசா அன்பும், பண்பும், சுயதிறனும், விடா முயற்சி யும் கொண்டவர். மாணிக்க அக்காவின் குடும்பப்பொறுப்பும், பாசமும் வாஞ்சையுமுள்ளவராக திகழ்ந்த இரண்டாவது மகன் ஆவார். எனது அண்ணன் சிவபாலுவுடன் படித்தவர்.

ஆங்கிலவாடையே அறியாத குமுளமுனையில் பிறந்து வளர்ந்த ஆனந்தராசா தானாகவே ஆங்கிலம் கற்று ஆங்கில ஆசா னானார். குடும்பப் பொறுப்பை வெகுவாக உணர்ந்து செயற்பட்ட ஆனந்தன் மாணிக்கக்காவின் பாசத்திற்காளான புதல்வன். அவர் பல்கலைக் கழகத்தில் புகுந்தது காலங்கடந்துதான். அவர் யாழ் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் படித்தபோது மொழியினையும் ஒரு பாடமாகஎன்னிடம் கற்றார். தன்னுடைய முயற்சித்திறன் பற் றிப் பேசி இன்புறுவார். தன் தம்பிகள் தங்கையர் காலம் தாழ்த்தாது படித்துப்பட்டம் பெறத் தான் ஏற்ற முயற்சிகளைச் செய்து உதவ வேண்டும் என்று அங்கலாய்ப்புற்றார். இதனால்தான் மாணிக் கக்கா அந்த மகன்மேல் அளவுகடந்த பாசமாக இருந்து அவர் அறிவு றுத்தலைக்கேட்டு வாழ்ந்தார். அவர் அநியாயமாக அழிக்கப் பட்டது கண்டு வெந்த மாணிக்கக்காவுக்கு ஆறுதலே கூறமுடிய வில்லை. எத்தனை இழப்புக்கள்! வேதனைகள்!

எங்கள் குடும்பத்திற்கும் அவர்களுக்கும் இடையில் பல ஒற்றுமைகளும் இருந்தன. மாணிக்கக்கா பிரசவிக்கும் காலங்களில் எனது அன்னையும் பிரசவிப்பது வழக்கமாக இருந்தது. இரு குடும் பங்களிலும் சமவயதுப் பிள்ளைகள். எனக்கும் தங்கராணிக்கும் சம வயது. குடும்பத்தில் நிகழும் நல்ல - கெட்ட அம்சங்கள் எல்ல வற்றையும் பந்தலின் கீழே இருந்து மாணிக்க அக்கா அம்மாவுடன் வெற்றிலை மென்று கொண்டு அலசிக்கொண்டிருப்பார். "சூரியன் உச்சிக்கு வந்திட்டான், ஐயோ! நான் சமைக்கக் கறி குடுக்கவில்லை" என சந்தையில் வாங்கின மரக்கறி, மீன்களை எடுத்துக்கொண்டு எட்டி நடைபயில்வார் மாணிக்கக்கா.

கல்வியில் மிக உயர்கல்வியைப் பெற்றவர்கள் முல்லைத்தீவு வட்டாரத்தில் குமுளமுனையில்தான் இருந்தனர். அவர்களில் மாணிக்க அக்காவின் மகன்இரகுநாதனும் ஒருவர். மாணிக்க அக்காவிற்கு மகன் பல்கலைக்கழகத்தில் விரிவுரியாளராக இருப்பது அளவுக்கு மேலான மகிழ்ச்சிப் பெருக்கைக் கொடுத்தது. நான் அவரை கடைசியாகச் சென்று சந்தித்தபோது அவர் தெய்வேந்திரன் என்ற கிராமசேவகரான மகனுடனும் மருமகளுட னும் அவர்களின் பிள்ளைபோலப் பராமரிக்கப்பட்டார். மிகுந்த வாஞ்சையுடன் என்னுடன் அளவளாவினார் மாணிக்கக்கா என் நினைவில் இன்றும் அழியாது நிற்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகமணி அண்ணையும் தெய்வானை அக்காவும் பல பிள்ளைகளைப் பெற்றனர். அவர்கள் மாணிக்கக்காவின் பெற்றோர் அவர்கள் மணற்பாட்டில் இயற்கையாக ஊற்று எடுத்தோடும் காணிகளுள் சூழ்ந்த இடத்தில் குடியிருந்தனர். மாணிக்கக்கா - கனகையா குடும்பமும் அங்கேதான் ஆரம்பக்குடும்பவாழ்க்கையை ஆரம்பித்ததனர். சித்திரைப் பௌர்ணமியில் பந்தல்போட்டு சித்திரைக் கதை படித்து கிடாரங்களில் சமைத்து ஊரவர்க்குப் பகிர்ந்து கொடுக்கும் பண்பை வளர்த்து கொண்டே சமூகமாக இயங்கிய வாழ்வைப் பெற்றோரிடம் பெற்றுக்கொண்ட மாணிக்கம் மனித நேயத்தையும் வளர்த்துக்கொண்டார்.

இயற்கைச் சூழல் படர்ந்த குமுளமுனையில் நந்திக்கடல் நாயாற்றுடன் கலக்கும் தொடுவாயாக ஊரின் கோடிப்புறமாக அமைந்து ஊரை அழகுபடுத்தியதுடன் இயற்கையாக பல வளங் களையும் கொடுத்தது. இவற்றை எல்லாம் ஊரவர் அத்தனைபேரும் ஆம்பல் என பணங்கொடுக்காமலே தங்கள் உழைப்பால் பெற்றுக்கொண்டனர். அந்த வளங்களை ஆண்-பெண், சாதி-மத வேறுபாடின்றி அனைவரும் தமது உழைப்பை நல்கிப் பெற்ற தாலும், காடு சூழ்ந்த, வயல்கள் வளம் கொளித்த சூழலினால், காட்டு விலங்குகள் பழங்கள், மூலிகைகள், கொடிகள், காய்கள் எல்லாம் பணங்கொடுத்தும் பெறாத வளங்கள் பெற்றும் தம் உழைப் பால் பெருங்குடும்பத்தை வளர்ப்பதற்கு மாணிக்கக்கா பெரும் பாடுபட்டார். வேலிகளில் படரும் குருவித்தலைப்பாகல், முசுட்டை, முல்லை, முருங்கை, அகத்தி, வட்டுக்கத்தரி போன்ற இய ற்கை தந்த அசேதனச் செல்வங்களில் மாணிக்கக்கா காட்டிய அன் பும் அக்கறையும் அவரை நீண்ட ஆயுள் கொண்டவராக்கியது.

பிள்ளைகளில் அவர் காட்டிய அக்கறை பற்றிப் பலரும் பாரட்டுவர். ஐரோப்பா சென்ற பிள்ளைகள் மணிக்கக்காவை சிறப் பாக வாழவைத்தனர். ஆணாதிக்கம் அவரது குடும்பத்தில் அதி காரம் செலுத்தவில்லை. கனகையாண்ணர் மாணிக்கக்காவுடன் இணைந்து குடும்ப உயர்விற்காகப் பாடுபட்டாரேயன்றி பெண்ணை அடிமையாகக் கருதவில்லை. இவர்கள் இருவருமே உழைப்புக்கு கைகொடுத்தமையால் இவர்களது வாழ்வும் படிப் படியாகச் செழிப்புற்றது. இதனால் பெற்ற பிள்ளைச் செல்வங் களையும் குடும்ப உறவைப் பேணிவளர்க்கக்கூடிய சூழலுக்கு முகங் கொடுக்கும் வழிகாட்டலைச் செய்ய முடிந்தது. மாணிக்கக்கா வையத்துள் சிறப்பாக வாழ்ந்து முதுமையிலும் அன்பான பராமரிப் புக்குள் இயற்கை எய்திய வாழ்வுடன் அமைதியானர். மாணிக்கக்கா விலைமதிப்பு மிக்க ஒரு மாணிக்கம்தான்!

*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

கலாநிதி பார்வதி கந்தசாமி
முன்னை நாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
மொழியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர்.
(கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## "தோன்றில் புகழோடு தோன்று" என்ற வள்ளுவரின் கூற்றுக்கமைய வாழ்ந்து காட்டியவர்.

பிறப்பும் இறப்பும் பேருண்மையென அறிந்திருந்தும்கூட அமரர் திருமதி மாணிக்கம் கனகையா அவர்களின் மறைவுச் செய்திகேட்டு பேரதிர்ச்சியும், சொல்லொண்ணாத் துயரமும் யான் அடைந்தேன்.

நான் மிகவும், செல்லமாக அழைத்த 'பெத்தாச்சி' அவர்தம் குரல் ஓய்ந்து விட்டதா? என்பதை ஏக்க உணர்வுடனேயே பார்க்கிறேன்.

வன்னியில் வளம் கொழிக்கும் எழில்மிகு கிராமம் தான் குமுளமுனை சிறு களப்பு களையும் (சிறுகடல்) தண்ணிமுறிப்பு வயல் வெளியும் ஊரிற்கு வளம் சேர்க்க கொட்டுக் கிணற்றடி விநாயகர் கொலுவீற்றிருந்து அருள் பாலிக்கும் சிறப்புக்கள் இன்றுவரை மாறாது திகழும் இவ்வூரில் சீரும் சிறப்புடனும் வாழ்ந்தவர் தான் அமரர் அவர்கள்.

"தோன்றில் புகழொடு தோன்று" வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கமைவாக பார்போற்றும் பண்பாளராக அமரர் திகழ்ந்தார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்ற வள்ளுவர் ஈரடி வரிகளுக்கிணங்க அவர் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டியவர்.

பண்டைத் தமிழரின் பக்குவங்களுடன் (14) பிள்ளைகளை பெற்றெடுத்த வீரத்தாயாக அவர் தம் பிள்ளைகளைப் பாரினிலே சிறந்து விளங்கும் முத்துக்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிர்விட்டு துறைசார்ந்த "தந்தை மகற்காற்றும் உதவி" என்ற கூற்றுக்கு அமைவாக ஈன்ற பொழுதிலும் பெரிது வந்து இனிவுற்றிருந்து இன்றுவரை எமதூரின் மூத்த தயாக வாழ்ந்த இத்தகைய அன்னையின் பிரிவானது எமக்கும் எமது ஊருக்கும் பெரும் இழப்பாகவே அமைந்துவிட்டது.

செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருக்கின்ற சிறந்த இல்லறப்பண்புகள் இவர்வீட்டில் நிறையவேயுண்டு. நல்ல நடத்தைகளையும் பண்புகளையும் தன் பிள்ளைகளுக்கே மாத்திரமல்லாமல் பிறருக்கும் வழிகாட்டியாக வாழ்ந்து காட்டியவர்.

அவரது இறைபக்திக்கு உதாரணமாக சித்திரைமாதம் என்றதும் சித்திரைக் கதையின்போது அவர் அன்னதானம் (விருந்து) அமரரது மேல்சமூகத் தொண்டு காட்டி நிற்கின்றது.

அமரரின் இழப்பால் துன்புறும் அவர் தம் பிள்ளைகளுக்கும், குடும்பத்தாருக்கும் உறவுகளுக்கும் கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குகின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!!

**திரு. சி. இராசேஸ்வரன்**
**முன்னாள் பிரதிக்கல்விப்பணிப்பாளர்**
**குமுழமுனை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரிய நல்ல அறிவுரைகள் பல சொல்லி வழிகாட்ட பெரியம்மா இனியில்லை...

என் சிறுவயதுப் பருவத்தில் பெரியம்மா கைப்பிடித்து
நடந்துபோன நினைவுகளோ ஆயிரம் ஆயிரம்.

குமுளமுனை என்றதுமே பெரியம்மா ஞாபகமே!
பாலும் தயிரும் பலாப்பழமும் பிட்டும்
பெரியம்மா கையாலே பல சுவைகள் எமக்கூட்ட
பேரின்பம் கொண்டோமே பெரும்பேறு பெற்றோமே

பட்டுச்சாறியுடன் பெரியம்மா அழகொளிரக்
கொட்டுக் கிணற்றடிக்குப் பொங்கலிட்டு வந்ததுவும்
நாயாற்று வெளிகாட்டி அரியாத்தை கதைசொல்லி
குமுளமுனை ஊரதனின் பூர்வீகம் நாமறிய
குருந்தூர் மலையதனின் பெருமைதனைச் சொன்னதுவும்
நேற்றுப்போல் தெரிகிறதே நானெங்கே மறந்திடுவேன்

அரிய நல்ல அறிவுரைகள் பலசொல்லி வழிகாட்ட
பெரியம்மா இனியில்லை பேரிடியால் போனதுவே
பெரியம்மா இன்றில்லை இருப்பினும் வாழ்வீர்கள்
எம் நெஞ்சில் நீங்காத ஆருயிர் அம்மாவாய்
அன்பு கொண்ட தெய்வமாய்.

பெறாமகன்
- முல்லைக்கோணேஸ்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்விமான்கள் பலரை உலகிற்களித்த பெருமை உங்களையே சாரும்

இந்துமா சமுத்திரத்தின் அழகிய முத்தான ஈழவளநாட்டின், முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று கரிக்கட்டுமூலை தெற்குப் பிரிவினில் தண்ணிமுறிப்புக் குளத்தில் நீர்வளமும், நிலவளமும், கால்நடை, கனிமவளங்களுடன் கல்வி சார் சமூக வளமும் நிரம்பப் பெற்றுள்ள குமுள முனைக் கிராமத்தில் பிறந்து வளர்ந்து கனகையா அவர்களைக் கரம்பிடித்து இனிதே இல்லறம் நடத்தி வாழ்ந்தும் பதின்நான்கு மகவுகளைப் பெற்று, பாசமுடன் வளர்த்து அவர்களை அரும் பாடுபட்டு கல்விமான்களாக உலகிற்கு அளித்த பெருமை உங்களையே சாரும்.

அமரர் திருமதி. மாணிக்கம் கனகையா அவர்களை **1960** இல் எனது சிறு பராயத்திலிருந்தே நன்கு தெரியும். **1950 - 1980** காலப்பகுதியில் அளம்பிலில் எனது பிதா. அமரர் திருவாளர் பி.வ.மிக்கேற் பிள்ளை சுதேச வைத்தியரிடம் வைத்தியம் பார்க்க வருவதனால் தொடர்புமிகக் கொண்டிருந்தார். எருமைப்பால் புக்கை, உறை தயிருடன், பலாப் பழம், பால். வாழைப்பழங்கள் என்பவற்றுடன் கட்டுப்பெட்டியில் பல்வகைப் பலகாரங்களுடனும், கணவருடனும் வண்டில் கட்டி வந்திறங்கும் மாணிக்கம் எமது அம்மாவினது பிரியமான தோழியுமாவர்.

அவரையும் அவருடன் உள்ளவர்களையம் மதித்து எமது குடும்பத்தினருடன் பெருவிருந்தாக்கி உழவுடன் விருந்துண்டு மருந்து எடுத்துச் செல்வதும், நெல்குற்றவென அம்மாவுடன் காலை பஸ்சில் சென்று, மாணிக்கம்மாவீட்டில் தங்கிநின்று வருவதுண்டு. மில்தனில் நெல்குற்றி மாலை பஸ்சில் திரும்புவதும் மறக்கமுடியாத அனுபவங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னைய காலத்தில் குமுளமுனை மத்தி கிராம அலுவலராக நான் பணியாற்றிய காலப்பகுதியில் பாசமுடன் என்னை ஏற்று அவர் வீட்டில் நண்பன் தெய்வேந்திரன் கிராம அலுவலருடன், பணிகள் பல புரிந்தவேளையிலே பல நாட்கள் விருப்புடன் விருந்தளித்து, பசி ஆற்றி அக மகிழ்ந்த பெருந்தகை. இடப்பெயர்வுகள் வயல்விளை பொருள் இழப்புக்களுடன், மகன் ஆனந்தராஜாவையும், பின்னர் கணவரையும், இழந்த நிலையில் தனித்து குடும்பப் பொறுப்பேற்று பாங்குடனேயே பழகிவந்தார். ஆழிப்பேரலையில் அருமை மகளையும், போர் அனத்தத்தில் பேரப்பிள்ளையையும் பறிகொடுத்து கலங்கித் தேறியிருந்தார். தமக்கென மகளிர் குழாம் ஒன்றினையும் கொண்டிருந்தார்.

அண்மையிலே நோய்வாய்ப்பட்டு 'நவ லோக" தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தவேளை நானும், மனை வியும் அங்குவந்து பார்த்தபோது, நோய் மறந்து எம்முடன் சிரித்துப் பேசி மகிழ்ந்தமை இன்றும் எம் மனக்கண்ணில் நிற்கின்றது. நல்ல சுகத்துடன் மீண்டும் வந்து, வீட்டினிலே உலாவித்திரிந்த வேளை, சடுதியில் வந்த காலன் உம்மை கவர்ந்து சென்ற செய்தி எம்மை, ஆறாத்துயரில் ஆற்றியது.

உங்களது பாச அழைப்பையும், உபசாரிப்பு க்களையும் அனுபவம் நிறைந்த கதை பேச்சுக்க ளையும் நினைத்து உள்ளம் கலங்க விழிநீர் சொரிய உமதான்மா சாந்திபெற பிரார்த்தனை செய் கின்றேன்.

இவ்வண்ணம்
என்றும் அன்பான
மி.ஞானேந்திரர்
முன்னாள் கிராம அலுவலர் முல்லைத்தீவு
கரைத்துறைப்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரியாத்தை பிறந்த மண்ணில் பிறந்த வீரத்தாய்

வளம் நிறந்த வன்னிப் பெருநிலப்பரப்பின் தெளிவான வரலாறு இன்றுவரை எழுதப்படாத ஒரு துர்ப்பாக்கிய நிலையை நீங்கள் பலரும் அறிவீர்கள். இருப்பினும்கூட, இந்தக் குமுளமுனைக் கிராமத்தில் 13 வருடங்களாக அதிபராக கடமையாற்றிய அனுபவத்துடன், கல்வியில் சிறப்புற்ற மதிப்புக்குரிய கனகையா அண்ணர் குடும்பத்துடன் கொண்டிருந்த நெருக்கமான உறவினூடாகவும், கர்ணபரம்பரைக் கதைகளை அடிப்படையாகக் கொண்டும் எனது கருத்துக்களைப் பகிரமுனைகிறேன்.

"வந்தாரை வாழவைக்கும் வன்னிமண்" என்ற பெருமை பெற்ற வன்னியிலே வளம் நிறைந்த பல்வேறு கிராமங்கள் உண்டு. அத்தகைய கிராமங்களில் ஒன்றுதான் குமுளமுனை. அதுமட்டுமல்லாது வன்னிப் பெருநிலப்பரப்பில் தொன்மையான வீரவரலாற்றுப் பின்னணி கொண்டதோர் கிராமமாக விளங்குவது முமுளமுனைக் கிராமம் என்று சொன்னால் அது மிகையல்ல. வன்னி மன்னரின் ஆட்சி காலத்திலேயே குமுளமுனை குறிப்பிடத்தக்கதாக இருந்தமைக்கு இக்கிராமத்தில் இன்றும் இம்மக்களால் வழிபடப்படுகின்ற கொட்டுக்கிணற்றடிப் பிள்ளையார் முதற்கொண்டு வன்னிமன்னர்கள் சார்ந்து அறியப்படுகின்ற வரலாற்று ஆதாரங்கள் துணைநிற்கின்றன. மேலும் இன்றுவரை வன்னிவாழ் மக்களால் பெரிதும் போற்றிப் புகழப்படுகின்ற வீரப்பெண்மணிஅரியாத்தை பிறந்த மண் இந்தக் குமுளமுனை என்பது குறிப்பிடப்படவேண்டியதொன்றாகும். இவ்வூரில் ஆனைகட்டிய புளியமரத்தின் கதையும்யாவரும் அறிந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளாண்மையை பிரதானதொழிலாகக் கொண்டவர்கள் இக்கிராம மக்கள். அது மட்டுமல்ல மருதநிலத்து மாந்தருக்குரிய பண்புகளான ஆடல் பாடல் முதலானவற்றில் இவர்கள் ஒன்றும் சளைத்தவர்கள் அல்ல. கலை இவர்கள் வாழ்வில் பின்னிப் பிணைந்திருந்தது. இதனை விபரமாக நான் இந்தக் குமுளமுனைக் கிராமத்தைப் பற்றி ஏன் சொல்கிறேன் என்று பலரும் இப்போது நினைப்பது புரிகிறது. ஆம்.. உண்மைதான்...! ஒரு பிரசித்தமான கிரேக்கப் பழமொழி உண்டு. அதாவது "ஒரு மனிதனை அவனது வாழ்வியற் சூழலே தீர்மானிக்கிறது"என்பதாகும்.

அந்தவகையில் இன்று எங்கள் முன் இருக்கும் எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய மாணவனாகிய கலாநிதி க. இகுநாதன் அவர்கள் இந்தக் குமுளமுனைக் கிராமத்தின் உரித்துக்குரிய குடிமகன் என்பது பெருமைக்குரியதாகும்.

கலாநிதி க.இரகுநாதன் அவர்களின் தாயார் திருமதி. கனகையா மாணிக்கம் அவர்கள் தனது 87 ஆவது வயதில் இறை பதம் அடைந்தமைக்கான இரங்கலில் முக்கியமாகக் கூறவிரும்பும் ஒன்று என்னவென்றால் திருமதி கனகையா மாணிக்கம் அவர்கள் "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மக்களைச் சான்றோர் எனக்கேட்ட தாயாவார்" என்பதுதான். இது அன்னாரது முயற்சிக்கும், சிறந்த குடும்ப நிர்வாகத்திற்கும் கிடைத்த பரிசாகவே கொள்ள வேண்டும்.

தான் பெற்ற பிள்ளைச் செல்வங்கள் எல்லோரும் கல்வியில் சிறந்திருப்பதென்பதைத் தவிர வேறு சிறப்பு ஒரு தாய்க்கு ஏது...?

அரியாத்தை பிறந்த மண்ணில் பிறந்ததாலேயோ என்னவோ இந்தத் தாயும் பல பிள்ளைகளைப் பெற்று வளர்த்து கல்விமான்களாக ஆக்கிய வீரத்தாயென்றே பெருமையோடு சொல்ல விரும்புகின்றேன். அத்துணை வல்லமையோடும் ஆளுமையோடும் இந்தக் குடும்பத்தின் முதுகெலும்பாக இருந்து இறுதிவரை வழிகாட்டியவர் திருமதி கனகையா மாணிக்கம் அவர்கள்.

காலம்சென்ற மதிப்புக்குரிய கனகையா அவர்களது குடும்பத்தை நன்கறிந்தவன் என்ற முறையில் குமுளமுனைக் கிராமத்தில் எனது கடமையை ஆரம்பித்த காலத்தில் இவர்கள் எனக்கு மகிவும் ஆதரவு காட்டியமையை நான் இன்றும் நன்றியோடு நினைவுகூரக் கடமைப்பட்டவனாயிருக்கிறேன். அதிலும் குறிப்பாக என்னுடன் ஆசிரியராகக் கடமையாற்றிய அமரர் திரு கனகையா ஆனந்தராச அவர்களது புத்திசாலித்தனமும் துணிச்சலும் என்னால் மறக்கமுடியாத ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப அமரர்கள்



எங்கள் ஐயா திருவாளர்

*சின்னப்பு கனகையா அவர்கள்*



சிவஞானம் மஞ்சுளாதேவி
அவர்கள்



உயர்திரு. கனகையா ஆனந்தராசா
அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே” அவ்வாறு தனது பிள்ளைகளால் பல மட்டங்களில் போற்றத்தக்க பெறுமதியுள்ள தாயாரான திருமதி கனகையா. மாணிக்கம் அவர்கள்

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்”

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவார். என்று கூறி அன்னாரின் ஆத்துமா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனருள் வேண்டி நிற்கிறேன்.

நன்றி

**இ.அந்தோனிமுத்து**
**இளைப்பாறிய அதிபர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# REST IN PEACE APPAMMA..............

The hardest moment in my life was having to say goodbye to you. Pain, shock and rage filled inside means as I realize you're no longer with us. I asked God, why he took away our wonderful apamma. And the response I get is nothing, but silence.

It still seems like a dream, a terrible nightmare that I still cannot awake from. I can still hear your voice, your little stories, your smile and fell your presence of living. As the reality hits, I realize that you're not with us anymore, you're gone. You were the backbone of our big family, a joy in everyone's heart, a spirit which made the whole family united after grandfather passed away and a great grandmother that we could possible ever have or imagined off. Even though you weren't physically near me for past few years, I carried you within my heart. You were always there in my mind and in my soul. Your inspirational talk, role model, behavior, motivational advices and specially the way you call my name are just unforgettable.

Every time I came to visit you would always hug, kiss me and ask about my studies. I loved getting hugs from my grandmother. It made me feel special and welcoming. The times I came over to visit I asked you to tell me stories about my dad and other uncles when they were little and you'd tell me the stories with that pleasant smile in your face. I could still imagine you telling me those stories again. Sadly here I am left with only memories.

The ways in which I miss you I simply cannot express in words. The thought of you not being here is hard to cope with and it really hurts. Your love left me memories that no one can steal. Memories that I will treasure. I know you are in a good place, right by God's side. I know you are watching all of your loved ones from heaven. I feel really blessed and thankful to have an amazing grandmother like you. As a family we all miss you so much and will continue to miss you all our lives.MAY GOD REST YOUR SOUL IN PEACE.

**LOVE,**
**Granddaughter/Sankavi.Ragunathan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தன்னம்பிக்கையை வளர்த்துவிடும் ஒரு தாய்

மறைந்தாலும் மறையாத
மாதர்குல மாணிக்கம்
மாதரசி வீரப்பெண்
கனகையா மாணிக்கம் அம்மாவை
காலன் பறித்துச் சென்றானே
கணம்தோறும் கலங்குவதைவிட
கற்பரசியின் கதைகளை
கருத்தில் காண்பதன்மூலம்
பெண்ணடிமைத்தனத்தின்
பேதமைகள் மறைந்துவிடும்
தன்னம்பிக்கை வளர்ந்துவிடும்
ஒருதாய் மக்கள் என்ற
காலத்தின் கடைசிச்சின்னம்
பதினான்கு பிள்ளைகளை
நூற்றி நாற்பது மாதங்கள்
சுமந்து பெற்ற மாபெரும்
கருவறையின் சொந்தகாரி
வறுமையை எதிர்த்துப் போராடி
வாழ்வில் கொடி பறக்க வைத்தவர்!
மாபெரும் நாயகர் அமரர்
நாகமணியரின் வீரப்புதல்வி
முதலியார் பரம்பரையின்முத்தாக
விளக்கெரிய உப்புநீர்
கொடுத்துதவும் சிலாவத்தை மண்ணின்
கனகையா அண்ணரின்
பாதியுடலானவர்
சரவணையார் வளவும்
சித்திரக் கதையும்
சரித்திரம் கூறும் உரித்தாழி
மகன் தந்தைக்காற்றும்
உதவியையும் தந்தை
மகற்காற்றும் உதவியையும்
தானே உருவாக்கியதால்
வீரம் விளைந்த மண்ணின்
விருட்சமானாரே.

கலாமணி
குழுழமருதன்
சி.தெய்வேந்திரம்பிள்ளை
(உடையார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதருள் மாணிக்கம் மரணித்ததா?

குமுழமுனை எனும் அழகிய பழம்பெரும் கிராமத்தில் சைவ, தமிழ் பண்பாட்டு விழுமியங்களில்மேலோங்கி வாழ்ந்த குடும்பத்தில் "மாணிக்கக்கா" என்று அனைவராலும் அழைக்கப் பட்டவர் இன்று எம்மத்தியில் இல்லை. என் அம்மா பெயர் தங்கம். தங்கமும் மாணிக்கக்காவும் இணைபிரியா நண்பிகள். ஆதலாள் இவர் குடும்பத்தில் சிறுவயதுமுதலே நெருங்கிப் பழகியவன். இல்லற வாழ்க்கைக்கு இலக்கணமாக வாழ்ந்தவர். ஏழ்மையிலும் சரி செல்வத்திலும் சரி எளிமையாக வாழ்ந்தவர். ஏழ்மையில் வாழ்ந்த வாழ்க்கையை நினைவுகூருபவர். நன்றி மறவாதவர் உண்மையாக வும் நேர்மையாகவும் வாழ்ந்து பிள்ளைகளை உயர் நிலைக்கு கொண்டுவர அரும்பாடுபட்டவர். அவரது புனிதமான மனத்துக்கு கிடைத்த அழியாத சொத்தாக அவரது பிள்ளைகள் உயர்கல்வியை பெற்றதுடன் அரச ஊழியர்களாகவும் வெளிநாடு சென்று வாழவும் நல்ல இடங்களில் வரன்களைப்பெற்று வாழவும் வழிசமைத்தவர். இவர் குடும்பத்துக்கு தாயாக மட்டுமல்ல அயலவர் , ஏன் கிராமத் துக்கே தாயாக இருந்து அன்பு கருணையுடன் ஆலேசனைகளை வழங்கியவர். அந்தவகையில் எனக்கும் ஒரு தாயாகவே விளங்கி னார். இங்கு ஒரு சம்பவத்தை குறிப்பிட விளைகிறேன். எமது ஊரில் கற்பக விநாயகர் ஆலயம் கும்பாவிஷேக நிறைவுவிழாவில் என்னை பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்ட வேளை இதனைப் பார்க்க எனது தாயார் தற்சமயம் இல்லையே என -! இருந்தும் எனது தாயார் சபையிலே இருக்கிறார் என அவரை "மாணிக்கக்காவை விழிக்கும்போது" எனைப்பார்த்து கும்பிட்ட கையுடன் காட்சி தந்தார். அந்த சம்பவத்தை எப்பவும் நான் மறந்ததில்லை. எது எப் படியோ மனிதப் பிறவியில் இறப்பு என்பது முடிந்த முடிவு என தேறுவோம் தேற்றுவோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தி.சிவபாதம்
ஒவ்வூதியர்.
சமாதான நீதவானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீரத்தாயாக வன்னிப் பிராந்தியத்தில் வீறுநடை போட்டவர்

**வ**ளமிக்க குமுழமுனையின் பழங்குடி மக்களின் பண்பாட்டின் முதன்மையிடத்தை நான் செல்லமாக அழைக்கும் மாணிக்கம் அக்கா பிடித்துக்கொண்டார்.

14 பிள்ளைகளைப் பெற்று 16 பேறும் பெற்று வீரத்தாயாக வன்னிப் பிராந்தியத்தில் வீறுநடைபோட்டு தன்னையும் அயலவர்களையும் சுற்றத்தாரையும் இன்முகத்தோடு பேசி இல்லற வாழ்வை சிறப்புற நடத்திவரும் வேளையில் கடந்த 04.09.2012 அதிகாலை தனது இவ்வுலக வாழ்வை இழந்துவிண்ணகம் சென்றுவிட்டார்.

இதே போன்று தனது குடும்பத்திலும் அதிக பிள்ளைகள் இருந்தும் ஏனையோரையும் தனது பிள்ளைகளாக மதித்து வந்தார். ஆரம்ப வாழ்வில் எனது வீட்டுக்கு அருகில் தான் இவர்கள் குடும்பம் வாழ்ந்து வந்தது. அப்போது இருந்து இப்பவரையும் கிட்டடிச் சொந்தக் காரராகவே வாழ்ந்து வந்தோம். காலஞ்சென்ற எனது தாய் தந்தை மெச்சக்கூடிய அளவுக்கு இருவீட்டாரும் நல்லெண்ண நோக்கோடே வாழ்ந்து வந்தோம். உதவி ஒத்தாசையாக எம்முடன் வாழ்ந்த மாணிக்க அக்கா இக்காலப்பகுதியில் விண்ணுலகம் செல்வா என்று நான் கனவில் கூட எதிர்பார்க்க வில்லை.

இப்படிப்பட்ட புத்தி ஜீவிகளை எமது கிராமம் இழந்து விட்டது.

இவரின் ஆத்துமா சாந்தியடைய எல்லாம்வல்ல கொட்டுக் கிணற்றுப்பிள்ளையாரை வேண்டி நிற்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**காசிநாதர் - இரதிநாதன்**
**சமாதான நீதவான் | திடீர்மரணவிசாரணை அதிகாரி**
**கரிகட்டு மூலை தெற்கு**
**முல்லைத்தீவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தப்பூமியில் பிறந்த முழுமையான பலனைஅடைந்து "வையகத்தில் வாழ்வாங்கு" வாழ்ந்தவர்

**நீ**ர்வளமும் நில வளமும் நிறைந்த இயற்கை அழகு மளிரும் கிராமமான குமுழமுனையிலே விருந்தினரை அன்புடன் உபசரித்து ஆறுதலளிக்கும் பழம் பெரும் குடியைச் சேர்ந்தவர்தான் அன்னை மாணிக்கம் அவர்கள். சிறந்த கல்விமான்களையும் பண்பாளர்களையும் உலகிற்களித்த பெருமை இவர்களைத்தான் சாரும். அம்மாவின் பிள்ளைகள் பல்வேறு துறைகளிலும் பிரபல்யம் அடைந்தவர்கள். மாணிக்கம் அம்மா இந்தப் பூமியிலே பிறந்த பலனை முழுமையாக அடைந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, தனது சொந்த மண்ணிலே தனது இன்னுயிரைத் துறந்தார். அன்னாரின் ஆத்ம சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் இவரின் இழப்பால் துயருற்றிருக்கும் மக்கள் மருமக்கள், உறவுகள் சகலருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சதாசிவம் கனகரத்தினம்**
**முன்னைநாள் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினரும்,**
**ஜனாதிபதியின் முல்லை மாவட்ட இணைப்பாளரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மங்காத மாணிக்கம்

இலங்கையின் சென்னியாம் வடக்கிலே ஐவகை நிலங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் முல்லை மாவட்டத்திலே செந்நெல்லும் தேனும் விளையும் கிராமம் குமுழமுனை. இங்கு குமாரவேல் நாகமணி தம்பதிகளின் செல்வப்புதல்வியாக அவதரித்தவர் மாணிக்கம். பெயருக்கேற்ப சிறந்த கடவுள் பக்தியும், அயலவரை அணைக்கும் பண்பையும் பெண்ணுக்கே உரிய இலட்சணங்களையும் கொண்டு திகழ்ந்தவர். மாணிக்கம் அவர்கள் பருவத்தே இல்வாழ்க்கையில் கனகையா என்பவரைக் கைப்பிடித்து பண்பாடு கலாச்சாரங்களுக்கு அமைவாக வாழ்ந்து வந்தவர் இல்லறத்தின் நல்லறமாக வாழ்ந்து காட்டி 14 மழலைச் செல்வங்களைப் பெற்றெடுத்து வாழ்வாங்கு வாழ வழி காட்டியவர். இவர்களின் வழி நடத்தலில் பிள்ளைகள் அனைவருக்கும் உரிய கல்வி புகட்டி அவர்களை உயர்வான பதவிகளுக்கு இட்டுச் சென்றவர். காலச்சக்கரத்தின் விளைவாக இடம் பெயர்ந்து சென்று அதனால் ஏற்பட்ட அசௌகரியங்களால் நோய்வாய்ப்பட்டு 04.09.2012 அன்று இறைவனடி சேர்ந்தார்.

இவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கமலகாந்தன்
அதிபர்
குமுழமுனை.ம.வி
முள்ளியவளை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# குமுழமுனைக் கிராமத்துக்கே பாரிய இழப்பாகும்.

**க**டந்த 2012.09.04 ஆம் திகதி காலமாகிய அமரர் கனகையா மாணிக்கம் அவர்கள் குமுழமுனை கிராமத்திலே வசதிகள் குறைந்த நிலையிலும் தனது பிள்ளைகளை சிறப்பான கல்வித்தர நிலைக்கு வளர்த்தெடுப்பதில் பாரிய பங்காற்றியுள்ளார். ஏனெனில் அவரது பல பிள்ளைகள் அரச சேவையில் இணைந்து பொதுமக்களுக்கான சேவையினை முன்னெடுத்துள்ளார்கள். முன்னெடுத்து வருகின்றார்கள். அவர்களில் சிலர் என்னுடனும் கடந்த 1990 தொடக்கம் 1999 வரையான காலப் பகுதிகளில் சிறப்பாக கடமையாற்றியுள்ளார்கள். அந்த வகையில் அமரர் கனகையா மாணிக்கம் அவர்களது இழப்பானது அவர்களது குடும்பத்திற்கு மட்டுமல்லாது குமுழமுனை கிராமத்திற்கே பாரிய இழப்பாகும்.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவிப்பதுடன் இறைவனடி சேர்ந்த அன்னையின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சி.ஏ.மோகன்றாஸ்**
**மேலதிக அரசாங்க அதிபர்,**
**முல்லைத்தீவு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல புதல்வர்களை பெற்றெடுத்து உயர் பதவிகளில் இருக்கச் செய்தவர்

அமரர் கனகையா - மாணிக்கம் அவர்கள் மரணித்ததாக எனக்குத் தெரிய வில்லை. என் கண்களில் இப்பொழுதும் அவர் முகம் பிராகாசிக்கின்றது. மிக நெருங் கிய உறவினர் மட்டுமல்ல மிக மிக நெருங் கிய நட்புக்குரியவராகவும் என்னுடனும் ஊர்மக்களுடனும் பழகி வந்தார். நான் அவர் வீட்டிற்குச் சென்று வருகின்றபோது, போன உடனேயே யாரப்பா நீ எனக்கேட்டு தெரிந்ததும் மெய்தழுவ கதைபலபேசி மகிழ்வுடன் உறவாடுவார். என்னவாம் ஊர்ப்புதினம் என கரிசனையாய்க் கேட்ட றிந்து ஆலோசனை செப்பிடுவார். பல புதல் வர்களைப் பெற்றெடுத்து அனைவரையும் பல உயர்வான பதவிகளில் இருக்கச்செய்த இந்த உத்தமியின் மரணம்கூட அவருக்கு அது மகிழ்வானது. இதைத்தான் புண்ணி யச் சாவு என்பார்கள். அம்மா உன்னைப் பற்றி எழுதுவதற்கு என்னால் முடியாது. என்றும் எம் நெஞ்சில் நிலைத்திருப்பாய்.

"உறவுகள் மறைந்தாலும்
நினைவுகள் என்றும் மறையாது"

வி.கலைச்செல்வன்
தலைவர்,
கிராம அபிவிருத்திச் சங்கம்,
குமுளமுனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சகல சௌபாக்கியங்களுடனும் இவ்வுலகில் வாழ்ந்தவர்.

"நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு".

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க நேற்று இருந்தவர் இன்று இல்லை என்னும் பெருமையுடைய இவ்வுலகில் அமரர் திருமதி கனகையா மாணிக்கம் அவர்கள் தனது 87 ஆவது வயதில் இறைபதம் எய்திய செய்தி கேட்டு துயரடைந்தோம்.

நாகமணி தெய்வானை தம்பதிகளின் மகளான மாணிக்கம் திரு கனகையாவை மணமுடித்து இவ்வாழ்வில் பதினான்கு குழந்தைகளுக்கு தாயாரானார். இவர்களில் எமது திணைக்களத்தில் வெளிக்கள போதனாசிரியராக, குடியேற்ற உத்தியோகத்தராக நீண்டகாலம் சேவையாற்றி ஓய்வு பெற்ற திரு.கனகையா பாலேந்திராவும் ஒருவராவர்.

மேற்குலகின் பொருளாதாரம் எமது மண்ணின் வளர்ச்சியில் பங்களிப்பு செய்யும் முன்னரே தனது கணவருடன் இணைந்து விவசாயம் , நெல் வேளாண்மை மற்றும் மிருக வேளாண்மையில் ஈடுபட்டு கடின உழைப்பால் அவர்தம் 5 புதல்விகளையும் 9 புதல்வர்களையும் கல்வியில் சிறக்க வைத்து பன்னிருவரை அரச உத்தியோகமும் பார்க்க வைத்தார்.

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசி
மகனின்
திருமண
வைபவத்தின்
போது
தம்பதியராக
ஆசி
வழங்கிய
போது...





தமிழ்நாட்டில்
பிள்ளைகள்,
மருமகள்,
பேரப்பிள்ளை
ஆகியோருடன்.

சத்திர
சிகிச்சையின்
பின்னரான
நடைப்
பயிற்சியின்
போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க தனது பிள்ளைகளை சான்றோராக்கி விட்டுச் சென்றுள்ளார். பேரப்பிள்ளைகள் கூட பல்கலையில் பயில்வதை கண்டு பேருவகை அடைந்துள்ளார்.

இவ்வாறு சகல சௌபாக்கியங்களோடு நிறைவான வாழ்வை வாழ்ந்து அமரத்துவமான இவரின்இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்து தெய்வத் திருவடியில் சங்கமித்த அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பொ.தயானந்தன்,
மாகாண காணி ஆணையாளர்,
காணி நிர்வாகத் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்பாளன் ஆக்கிய பெருமை அன்னையையே சாரும்.

தமிழர்களின் தொன்மை வரலாறுகள் நிறைந்த மாவட்டங்களில் முல்லைத்தீவு மாவட்டமும் ஒன்றாகும். இம்மாவட்ட மக்களின் வாழ்வியலானது இயற்கையோடு ஒட்டியதான வாழ்வியலாகவே இருக்கிறது. இத்தகைய மரபார்ந்த ஒரு குடும்பப் பின்னணியில் இருந்து வந்தவர்தான். திரு மகேந்திரன் அவர்களின் தாயாராவார். கலைப்பின்னணியும், கலைஆர்வமும் கொண்டதாக இவரது குடும்பம் இருந்திருக்கிறது. இருந்தும் வருகிறது. இல்லற வாழ்வில் அன்னர் பல துன்பங்களுக்கு மத்தியில் வளர்த்த இவரது பிள்ளைகள் எவரும் வீண்போக வில்லை வாழ்கையை வாழ்க்கையாக அவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

திரு மகேந்திரன் அவர்கள் எமது பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தராக கடமையாற்றி பின்பு நிர்வாக உத்தியோகத்தராக பதவி உயர்வு பெற்று தன்னுடைய பதவிக் காலத்தில் சிறப்பான நிர்வாகத் திறன் கொண்டவராக அறியப்பட்டவர். இவர் நிர்வாகத்திறனிலும் சரி கலைஇலக்கியத் துறையிலும் சரி திறமையானவராகவே இன்றும் திகழ்ந்து வருகின்றார் இவரது இத்தகைய சிறப்புக்கும் பெருமைக்கும் இவரது குடும்பப்பின்னணியே மூலகாரணமாக இருந்திருக்கிறது.

**“ஒரு பிள்ளை நல்லவனாவதும், கெட்டவனாவதும் பெற்றோரின் வளர்ப்பிலேயே”** என்று பெரியவர்கள் கூறுவார்கள் அத்தகைய பொன்னான வார்த்தைக்கு ஏதுவாக திரு மகேந்திரன் அவர்களை சிறந்த பண்பாளன் ஆக்கிய பெருமை அவரது அன்னையையே சேரும். இத்தகைய பெருமை மிக்க அன்னையை அவர் இப்பொழு இழந்திருப்பது அவரை மட்டுமல்ல எம்மையும் துயரில் ஆழ்த்துகின்றது. அன்னாரின் இழப்பால் வாடும் திரு மகேந்திரன் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திரு கோ.நாகேஸ்வரன்**
பிரதேச செயலர்
பிரதேச செயலகம்
கரைச்சி கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு (Diabetes)

நம் உடலில் உள்ள கலங்களுக்கு தேவையான சக்தியை, இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் கொடுக்கிறது. இருப்பினும் குளுக்கோஸை கலங்களினுள் செலுத்த இன்சுலின் என்ற ஓமோன் தேவைப்படுகிறது. வயிற்றின் பின் பகுதியில் சதையி (Pancreas) என்னும் சுரப்பி உள்ளது. இங்கிருந்துதான் இன்சுலின் உற்பத்தியாகிறது. இன்சுலின் அளவு குறையும்போது, உடலில் உள்ள கலங்களுக்கு தேவையான குளுக்கோஸை இரத்தத்தில் இருந்து பெறமுடிவதில்லை இதனால் இரத்த ஓட்டத்தில் குளுக்கோஸின் அளவு அதிகமாகிறது. இது சர்க்கரை நோய், நீரிழிவு நோய், Diabetes என்றறெல்லாம் அழைக்கப்படுகிறது.

இரத்த ஓட்டத்தில் சேரும் அதிகப்படியான குளுக்கோசு இதயம், சிறுநீரகங்கள், கண்கள், மற்றும் நரம்பு மண்டலம் மற்றும் இரத்த நாளங்களை பாதிக்கிறது. சரியான முறையில் மருத்துவர் ஆலோசனைகளைக் கடைப் பிடிக்காமல் இருந்தால் மோசமான விளைவுகளுக்கு ஆளாகிவிடுவோம். சில சமயங்களில் மரணத்திலும் முடியலாம். இரத்த குளுக்கோஸ் அளவை கட்டுப்பாட்டில் வைத்திருப்பார்கள், மேலே குறிப்பிட்டுள்ள உபாதைகளினால் பாதிக்காமல் தங்களை காத்துக்கொள்ள முடியும்

## நீரிழிவின் வகைகள்

- வகை *1* நீரிழிவு (Type 1 diabetes)
- வகை *2* நீரிழிவு (Type 2 diabetes)
- கர்ப்பகால நீழிழிவு (Gestational diabetes )

## வகை 1 நீரிழிவு நோய்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகை நீரிழிவு இன்சுலின் சார்ந்த நோய்வகை ஆகும். நீரிழிவு நோய் என்று முடிவு செய்யப்பட்டவர்களில் 5முதல் 10 சதவிகிதம் இவ் நீரிழிவு வகையைச் சார்ந்தவர்கள். நோயெதிர்ப்பு சக்தி வலு குறைவடையும்போது, இத்தொற்றுக் கிருமிகள் சதையின் (Pancreas) இன்சுலின் உற்பத்தி செயற்திறனை அழித்துவிடுகிறது. நாம் உண்ணும் உணவில் இருந்து கிடைக்கப் பெற்ற கொழுப்பு மற்றும் சக்கரையை இன்சுலின் இல்லாததால் நம் உடல் பயன்படுத்த முடியாமல் போகிறது. இவ்வகை நீரிழிவு நோய் உள்ளவர்கள் இன்சுலின் எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளவர்கள். அவர்களால் இன்சுலின் உற்பத்தி செய்ய முடியாது. இது சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும் எந்த வயதிலும் ஏற்படலாம். உடல்நிலை பாதிக்கப்படும் போது அசாதாரணமாக ஏற்படுகின்றது. இன் நோயை முற்றாக குணப்படுத்த முடியாதிருப்பினும் மருத்துவத்தின் முன்னேற்றத்தால் சுய கவனம் செலுத்தி இதில் இருந்து தங்களை காப்பாற்றிக் கொண்டு சிக்கல்களைத் தவிர்த்து, ஆரோக்கியமான வாழ்க்கையை வாழலாம்.

- பொதுவாக குழந்தைகளுக்கு ஏற்படுகிறது.
- அடிக்கடி தண்ணீர் தாகம் ஏற்படும், சிறுநீர் கழித்தல், எடைகுறைதல் போன்ற பிரச்சினைகள் உண்டாகும்.
- இது பொதுவாக பரம்பரை நோய் அல்ல
- இந்நோய் பரம்பரையில் இருப்பின் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.
- சக்கரையின் அளவை குறைக்க இன்சுலின் ஓமோன் தேவைப் படுகின்றது.
- உண்ணும் உணவு, உடற்பயிற்சி, இன்சுலினின் அளவு ஆகிய வற்றில் சிறிது மாற்றம் இருப்பின் இரத்தத்தில் உள்ள சக்கரையின் அளவு குறிப்பிடும் வகையில் மாறுபடும்.

## வகை II நீரிழிவு நோய்

இதை இன்சுலின் சார்பற்ற நீரிழிவுநோய் எனப்படும். பொது வாக 40 வயதைக் கடந்தவர்களுக்கு ஏற்படும் பாதிப்பு. இவர்களுக்கு இன்சுலின் சுரக்கும், ஆனால் தேவையான அளவு சுரக்காது அல்லது அதன் செயலாற்றும் தன்மை குறையும். நீரிழிவு நோய்யால் பாதிக் கப்பட்டவர்களில் 90-95 சதவிகிதம் இவ்வகையைச் சார்ந்தவர்கள். தற் சமய ஆய்வின்படி, இளைஞர்களும் பாதிக்கப்படுகிறார்கள். தற் போதைய வாழ்க்கை முறையும், உடல் உழைப்பைச் சாராவேலைகளை செய்வதும் ஒரு காரணம்.

இது படிப்படியாக முற்றி தீராத நோய்யாக மாறும் (Progre -ssive) ஒரு நோயாகும். குறிப்பிடத்தக்க மோசமான சிக்கல் களை உண்டாக்கும். குறிப்பாக இருதயநோய், சிறுநீரக நோய், மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் தொடர்பான, கை, கால் நரம்பு, இரத்தக் குழாய் பாதிப்புக்கள் ஏற்படலாம் மற்றும் அறுவை சிகிச்சை மூலம் கால் விரல்களை நீக்கும் நிலையும் ஏற்படலாம். இதற்கு நிரந்தர தீர்வு இல்லை என்றாலும், சிலர் ஆரம்பகட்டத்திலேயே நன்கு கவனம் செலுத்தி, தங்கள் உடலின் எடையைக் குறைத்து (பட்டினி இருந்து இடையைக் குறைப்பது முறையல்ல சரியான உணவின் மூலம் சீராக எடைக்குறைப்பு), உணவில் அதிக கவனம் செலுத்தி சக்கரையின் அளவை கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதால் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ்கிறார்கள். பலருக்கு சில மருந்துகளும், மற்றும் பலருக்கு இன்சுலினும் தங்களின் உடல் சிக்கலில் இருந்து காத்துக் கொள்ள தேவைப்படுகிறது.

வகை II நீரிழிவு நோயின் அறிகுறிகள்.

- பொதுவாக பெரியவர்களும், சில இளைஞர்களும் இதனால் பதிக்கப்படுகிறார்கள்.
- அடிக்கடி தண்ணீர் தாகம் ஏற்படும்
- பொதுவாக இது பரம்பரை நோய்
- பெரும்பாலும் இதனால் பாதிக்கப்படுபவர்கள் உடல் எடை அதிகமாகவும், உடல் பருமனாகவும் இருப்பார்கள்.
- இரத்தத்தின் சக்கரை அளவை, உணவு கட்டுப்பாடு, உடல் பயிற்சி, மருந்து மற்றும் இன்சுலின் மூலம் கட்டுப்பாட்டில் வைக்கலாம்.

## கர்ப்பகால நீரிழிவு நோய்

கருவுற்ற தாய்மார்களில் 3-5 சதவிகிதம் இவ்வகை நீரிழிவு நோயால் பாதிக்கப்படுகிறார்கள். பிரசவத்திற்குப் பிறகு பெரும்பாலும் இது தானாக சரியாகிவிடும். இன்சுலின் உற்பத்தியாகும் அளவு சற்றுக் குறைவதால் இப்பிரச்சினை ஏற்படுகிறது. இதை உணவு கட்டுப்பாட்டால் சரி செய்யலாம். பலருக்கு இன்சுலின் தேவைப்படும். குழந்தை பாதிக்கப்படும் என்பதால், மருந்துக்களை இவர்களுக்கு கொடுக்கமாட்டார்கள். பிறக்கும் குழந்தைகள் பொதுவாக மற்ற குழந்களைவிட சற்று பெரியதாக இருக்கும். பிறக்கும் குழந்தைக்கு இரத்தத்தில் சக்கரையின் அளவு சற்று குறைவாக இருக்கலாம். இவர்களில் 40 சதவிகிதம் பேருக்கு அவர்கள் முதுமை அடையும்போது வகை II நீரிழிவு நோயால் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே இவர்கள் பிரசவத்திற்கு பிறகு வருடம் ஒரு முறை டாக்டரிடம் பரிசோதனை செய்து கொள்வது நல்லது

**உணவு:** உணவு என்பது மாச்சத்து, புரதசத்து மற்றும் கொழுப்பு சத்தாகும். மாச்சத்து நாம் உண்ணும் அரிசி, கோதுமை ஆகியவற்றில் கிடைக்கிறது. கோதுமையில் நார்ப்பொருள் (fiber content) இருப்பதால், சக்கரை இரத்தத்தில் ஒரே சீராக சேருகிறது. காய்கறி, பழங்களை சேர்த்துக்கொள்ளும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நார்ப்பொருள் உள்ளவற்றை தேர்ந்தெடுப்பது நல்லது. நிலக்கீழ் விளைபொருட்களை தவிர்க்கவேண்டும். (உருளைக் கிழங்கு, கரட், பீட்ரூட்). பழங்களில் பலாப்பழம், சீத்தா போன்றவற்றை தவிர்க்கவேண்டும்.

**உடற்பயிற்சி :** உடற்பயிற்சி என்பது தினம் 30-45 நிமிட சுறுசுறுப்பாக நடப்பது. முடிந்தவர்களுக்கு 30 நிமிட ஓட்டம் (சீரான ஓட்டம்). இருதய நோய் உள்ளவர்கள் கண்டிப்பாக மருத்துவரின் ஆலோசனைப்படி உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

**சிகிச்சை :** இதற்கு நிரந்தர தீர்வு இல்லை என்பதை உணரவேண்டும். சரியான மருத்துவரிடம் முறையான சிகிச்சையை பெற வேண்டும். மருத்துவர் ஆலோசனைப் படி இரத்த பரிசோதனைகளை குறிப்பிட்ட இடைவெளிக்கு ஒரு முறை செய்தல், மருந்துக்களை உட்கொள்தல் வேண்டும். கண் மருத்துவரிடம் இரண்டு ஆண்டு களுக்கு ஒரு முறை கண்பரிசோதனை செய்ய வேண்டும். சரியான உணவை தினம் தோறும் உட்கொள்வது, உடற் பயிற்சி செய்தல், உடலில் அதிகப்படியான எடையை குறைத்தல் போன்றவற்றை "சுய கட்டுப்பாட்டுடன்" கடைப்பிடித்தால் நீரிழிவு நோய் இருந்தாலும் சராசரி யான, திருப்திகரமான வாழ்க்கையை நடத்தலாம்.



பேராசிரியர் (பேரப்பிள்ளை)
சி. சஞ்சீவன்
மருத்துவபீடம்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சிற்றம்பலம்

**தேவராய சுவாமிகள்**

**அருளிச் செய்த**

# கந்தர் சஷ்டி கவசம்

**காப்பு**

**குறள் வெண்பா**

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலன் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செய்யும் மயில்வா கனனார்

கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவ வீரா! நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென

வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்

சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ் வாயும்

நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ந மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவாயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்நம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்

றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிரக் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்ன வடிவேல் காக்க

சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறியிரண்டு அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க

வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க

எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கப் பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புகழைக்கடை முனியும்

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் மன்னரும்

கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்

பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்

காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒரு வழிப்போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதர்களெனைக் கண்டாற் கலங்கிட

அஞ்சி நடுங்கிட அகன்று புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்

கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரிவயப் போத்தொடு நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடா தோடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்

சூலைக்ஷயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்

காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா

கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் கால குமாரா
ஆவினன் குடிவாழ் ஆழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கவல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே

காரார் குழலாள் கலைகமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் னாடினேன் பரவச மாக
ஆடினேன் னாடினேன் ஆவிநன் பூதியை

நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திபெற்ற றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்

வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்பது உன்கடன்

பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய

பாலன் றேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்

சிந்தைகலங் காது தியானிப் பவர்கள்
ஒருநாண் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதி யேசெபித் துகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை

வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
வழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி

அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள்ள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேல போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்

சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

கந்த சஷ்டி கவசம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடைய எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

- பகவான் ஸ்ரீ கிருஸ்ணர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணுலகில்
23 . 03 . 1925



விண்ணுலகில்
03 . 09 . 2012

**கனகையா மகேந்திரம்**
கிராம அலுவலர் தலைமைப்பீடம் கரைச்சி பிரதேச செயலகம்
அவர்களின் தாயாராகிய
அமரர்

# கனகையா மாணிக்கம்

**7ஆம் வட்டாரம், குமுளமுனை, முள்ளியவளை**

உலகத்து வாழ்க்கைதனில்
உத்தமராய் வாழ்ந்தீர்கள்
அனைவருக்கும் மறக்கமுடியாத நல்ல
நினைவுகளைத் தந்தீர்கள்....
உறவுகள் ஓலமிட
ஊரவர்கள் கண்ணீர் மழை பொழிய
உங்கள் உயிரை காவலன்
பறித்ததுதான் ஏனோ....
உங்கள் ஆத்மா சாந்திக்காய்
பிராத்திக்கின்றோம்.

**அன்னாரின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு**
**எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

தகவல்
அக்கராயன் பிரதேச மக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
23
.
03
.
1925



மறைவு
04
.
09
.
2012

## அமரர் கனகையா மாணிக்கம்

**7ஆம் வட்டாரம், குமுளமுனை, முள்ளியவளை.**

எமது அலுவலகத்தில் கடமையாற்றிய
திரு.க.மகேந்திரன் (கிராம அலுவலர், நிர்வாகம்) அவர்களின்
தாயார் சிவபதம் அடைந்த செய்தி அறிந்து மிகுந்த
கவலையுற்றுள்ளோம். அன்னாரின் குடும்பத்தின் துயரத்தில்
நாமும் பங்குகொண்டு ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி

**பிரதேச செயலாளர், உத்தியோகத்தர்கள்**
**கரைச்சி பிரதேச செயலகம்,**
**கிளிநொச்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 23.03.1925 | 03.09.2012 |

**கனகையா மகேந்திரம்**
கிராம அலுவலர் தலைமைப்பீடம் கரைச்சி பிரதேச செயலகம்
அவர்களின் தாயாராகிய

அமரர்

# கனகையா மாணிக்கம்

**7ஆம் வட்டாரம், குமுளமுனை, முள்ளியவளை**

கண்ணின் மணிகளாய் நீங்கள் வளர்த்த
கண்மணிகளின் கற்றல் கண்டுமகிழ்கிறோம்
காலமெல்லாம் கண்மணிகளுக்காய் வாழ்ந்த
நற்குணத் தாயே! அம்மா – நீங்கள்
காலமான செய்தி காலை – எங்கள்
காதோரம் வந்ததேனோ?
கண்கள் கரைய கதறியழும் – உங்கள் உறவுகளுக்கு
என் சொல்லித் தேற்றுவோம்
ஓயாதுழைத்த உத்தமியே – நீங்கள்
ஓய்ந்து கண் உறங்குவதை நெஞ்சம் மறுக்கிறது....



அன்னாரின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆற்றல்
கலை, சமூக செயளர் முனைப்பு குழுமம்
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

Nobe Printers, Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு

1925
.
03
.
23



இறப்பு

2012
.
09
.
04

அமரர்

## கனகையா மாணிக்கம்

**7ஆம் வட்டாரம், குமுளமுனை, முள்ளியவளை.**

*நேற்றிருந்தார் இன்றில்லை*
*இன்றிருந்தார் நாளையில்லை - இது*
*யாவரும் அறிந்த உண்மை*
*அம்மாவே.....*
*வீட்டுக்கு யார் வந்தாலும்*
*ஆழமாய் விசாரிப்பாய்*
*உறவுமுறை கொண்டாடி*
*வாய்விட்டு சிரித்திடுவாய்*
*தெய்வேந்திரா... யாரடாப உந்தப்பிள்ளை*
*அழகாய் கேட்டுடுவார்*
*இனியாரம்மா இதனைக் கேட்டிடுவார்*
*உம் நினைவோடு என்றும் நாங்கள்.....*

எமது பகுதி அலுவலகர் தெய்வேந்திரன் ஐயா
அவர்களின் தாயாரின் பிரிவத்துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கிராம அபிவிருத்திச் சங்கம்**
**குமுளமுனை மேற்கு**
**முள்ளியவலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## கனகையா மாணிக்கம்

பிறப்பு : 1925.03.23
இறப்பு : 2012.09.04

மானிட வாழ்வில்
மரணங்கள் பலவிதம்
பலரது வாழ்வில்
விதிவெல்வதும்
சிலரது வாழ்ல்வில்
மதிவெல்வதும் இயல்பே
அம்மா உங்களது வாழ்வில்
விதி வென்றதோ?
உணர்வுகள் உலர்ந்தாலும் உங்கள்
உணர்விழந்தாலும் எங்கள்
நினைவுகளில் என்றும்
உங்கள் நினைவுகள் அழியாது.



**அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
அவர்களின் குடும்பத்தினருக்கு
எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவித்துக்கொள்கின்றோம்"**

**உதவி அரசாங்க அதிபர்,
கிராம உத்தியோகத்தர்கள்,
பணிமனை உத்தியோகத்தர்,
வெளிக்கள உத்தியோகத்தர்கள்,
கரைதுறைப்பற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணுலகில்

23
.
03
.
1925



விண்ணுலகில்

04
.
09
.
2012

கனகையா மகேந்திரம்
கிராம அலுவலர் தலைமைப்பீடம் கரைச்சி பிரதேச செயலகம்
அவர்களின் தாயாராகிய

**அமரர்**

# கனகையா மாணிக்கம்

**7ஆம் வட்டாரம், குமுளமுனை, முள்ளியவளை.**

விழியினைத் திறந்து விடியல் காட்டி
வழியிது வென வாழ்வும் காட்டி
எல்லோருக்கும் இமையெனவிருந்து
ஆலமரமாய் அன்புக்கரம் விரித்த – அம்மா
ஆண்டவன் அழைப்பில் – உன் உறவைப்
பிரிந்த எங்களின் இதய தெய்வமே
உங்கள் பிரிவால் துயருற்ற
உறவுகளின் துயரத்தில் பங்கெடுத்து
ஆத்மா சாந்திக்காய் இறைவனை
இறைஞ்சுகின்றோம் என்றென்றும்

அன்னாரின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பழைய மாணவர்கள்,
அக்கராயன் ம.வி,
அக்கராயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணுலகில்
23 . 03 . 1925

விண்ணுலகில்
04 . 09 . 2012

**கனகையா மகேந்திரம்**
கிராம அலுவலர் தலைமைப்பீடம் கரைச்சி பிரதேச செயலகம்
அவர்களின் தாயாராகிய

**அமரர்**

## கனகையா மாணிக்கம்

**7ஆம் வட்டாரம், குமுளமுனை, முள்ளியவளை.**

உங்கள் மரணம் உயிரின்நாடிகளையே
உலுப்பி விட்டிருக்கிறது.....!
நிஜம் என்று எண்ண நெஞ்சம் மறுக்கின்றது
காற்றிலே வந்த செய்தி
கனவாக வேண்டும் - என்று
கருணை மனு கேட்கிறது இதயம்...!
உயிரில் கலந்திருந்து உங்கள் உறவுகளை
ஏங்க வைத்து சென்றீர்களே...!
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

பிரமஸ்ரீ பாலச்சந்திரன் சர்மா குடும்பத்தினர்
ஸ்ரீமுருகன் ஆலயம், பிரதமகுரு
கந்தரபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது அன்புத் தெய்வமான அன்னையின் பிரிவுக்குமுன் அவரின் இறுதி அவசர சிகிச்சைக்கு வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல உதவியவர்களுக்கும் அம்மாவின் இறுதிச் செய்தியை அறிந்தவுடன் வந்துதவியோர்க்கும் இறுதிக்கிரியைகளின்போது கலந்துகொண்டோர்க்கும் அன்னாரின் பிரிவில் துன்பமுற்ற எமக்கு ஆறுதல் கூறியோருக்கும். அம்மாவின் அன்புடைய ஊர் மக்களுக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், கரைதுறைப்பற்று பிரதேசச்செயலகம், கிராமஅலுவலர்கள் ஏனைய அனைவருக்கும் மேலதிக அரசாங்க அதிபர் துணுக்காய் பிரதேச செயலாளர், கரைச்சிப் பிரதசே செயலகம், கிராம அலுவலர்கள் அனைவருக்கும் இம் **"மாணிக்க தீபம்"** தனை கணனிமூலம் அழகுற அச்சிட்டுத்தந்த நோபிள் அச்சகத்தாருக்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குலவழித் தோன்றல்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NOBLE printers.Jaffna.021 2220386